# மன்னிப்பு தேடிய தாவீது

பாடம் 21

**நாத்தான் :** ஒரு நகரில் இரு மனிதர் இருந்தனர். ஒருவன் செல்வன். மற்றவனோ ஏழை. செல்வனிடம் ஆடு, மாடுகள் ஏராளம் இருந்தன. ஏழையிடம் ஓர் ஆட்டுக் குட்டி தவிர வேறு ஒன்றுமே இல்லை. வழிப்போக்கன் ஒருவன் செல்வனிடம் வந்தான். செல்வன் ஏழையின் ஆட்டுக் குட்டியை எடுத்து வழிப்போக்கனுக்கு உணவு தயார் செய்தான். இது நியாயமானதா? ஏற்றுக் கொள்ளப்படக் கூடியதா?

**தாவீது :** அவன் இரக்கமின்றி இதைச் செய்தால் அவன் ஓர் ஆட்டுக் குட்டிக்காக நான்கு மடங்கு திருப்பித் தர வேண்டும்.

**நாத்தான் :** ஆண்டவர் உன்னை இஸ்ரயேலின் அரசனால் உன்னைத் திருப்பொழிவு செய்தார். நீ ஆண்டவரின் வார்த்தையைப் புறக்கணித்து அவர் தம் பார்வையில் தீயது செய்தாய்?

**தாவீது :** நான் ஆண்டவருக்கு எதிராகப் பாவம் செய்து விட்டேன். ஆண்டவரே! ஊம் அடியானின் குற்றத்தை மன்னித்தருளும்! (தாவீது அரவுனா என்பவரிடம் செல்கிறான்)

**அரவுனா :** என் தலைவராம் அரசன் உம் அடியானிடம் வருவதேன்?



தாவீது : ஆண்டவருக்கு ஒரு பலிபீடம் கட்ட வேண்டும். உன் போரடிக்கிற களத்தை விலைக்கு வாங்க வந்தேன்.

அரவுனா : இவைகளனைத்தையும் நான் இலவசமாக உமக்கு தருகின்றேன்.

தாவீது : இல்லை நான் உன்னிடம் விலைக்குத் தான் வாங்குவேன்.

அரவுனா : ஆண்டவராம் உம் கடவுள் உம்மை ஏற்றுக் கொள்வாராக!

செயற்பாடு

1. தாவீது அரசன் மன்னிப்புப் பெற்றுக் கொள்வதற்காக செயற்பட்ட விதத்தை எழுதுக.